# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


ஆண்டு: 6 திகதி: 25.11.2017

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா

மாணவர் பெயர்: -----------------------------------------------------

| வினாக்கள் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு பூரணமான விடை தருக.

## விளையாட்டு

விளையாட்டு உடலுக்கு ஆரோக்கியத்தையும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் அளிக்கிறது. நாம் பிள்ளைகளாக ஒருமித்து விளையாடும்போது ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் கற்றுக் கொள்கிறோம். ஓடி ஆடி விளையாடும் போது உடல் உறுப்புகள் பலமடைகின்றன. இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. உடலில் உள்ள அழுக்குகள் வியர்வையாக வெளியேறுகிறது.

அதனாலேயே பாரதியார்
“ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருககலாகாது பாப்பா” என்று பாடியுள்ளார்.

விளையாடும் போது சில விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சில விளையாட்டுக்கள் துடுப்பு, தடி, பந்து முதலிய உபகரணங்களை கொண்டு விளையாடப்படுகின்றன. இரு குழுக்களாகப் பிரித்துப் போட்டிகள் நடைபெறும்போது வெற்றி பெற்ற குழுவுக்குப் பரிசு அளிக்கப்படும். ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் விளையாட்டுகள் உள்ளன. விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுகள் நடைபெறும். பாடசாலைகளுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி மிகவும் பிரபல்யமானது. புலலாயிரக்கணக்கான மக்கள் இப்போட்டிகளை விளையாட்டு மைதானத்திலும் தொலைக்காட்சியிலும் பார்த்து ரசிப்பர்.

1.1 விளையாட்டினால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

……………………………………………………………………………

1.2 விளையாட்டினால் உள்ளம் என்ன நன்மை அடைகிறது.

……………………………………………………………………………

1.3 விளையாட்டின் போது உபயோகிக்கப்படும் இரண்டு உபகரணங்களின் பெயர் தருக.

……………………………………………………………………………

1.4 இரு குழுக்களாக விளையாடும் இரண்டு விளையாட்டுகளின் பெயர் தருக.

……………………………………………………………………………

1.5 மக்கள் விளையாட்டுப் போட்டிகளை எவ்வாறு பார்த்து ரசிக்கிறார்கள்?

……………………………………………………………………………

(3x5 =15 புள்ளிகள்)

1.6 பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள்.

1.6.1 துடுப்பாட்டம் ....................................

1.6.2 தொலைக்காட்சி ....................................

1.6.3 விளையாட்டுமைதானம் ....................................

1.6.4 உலகக்கிண்ணம் ....................................

1.6.5 பிரபல்யமானது ....................................

(5 புள்ளிகள்)

2. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

2.1 கமலாவும் வாணியும் கோவிலுக்குச் சென்றார்கள் இதில் சென்றார்கள் என்பதன் நிகழ்காலம் என்ன?

……………………………………………………………………………………

2.2 குழந்தை அழுதது – அழுதது என்பதன் எதிர்ச்சொல் என்ன?

……………………………………………………………………………………

2.3 சூரியன் காலையில் உதிக்கும் - காலையில் என்பதன் எதிர்ச்சொல் என்ன?

……………………………………………………………………………………

2.4 வாணி வீணை மீட்டினாள் - இதில் செயற்படு பொருள் என்ன?

……………………………………………………………………………………

2.5 பாரதியார் "ஓடி விளையாடு பாப்பா" என்று பாடினார். இதில் எழுவாய் என்ன?

……………………………………………………………………………………

2.6 பரிசளிப்பு என்பதை பிரித்து எழுதுங்கள்.

……………………………………………………………………………………

2.7 மரம் + வேர் என்பதை சேர்த்து எழுதுங்கள்.

……………………………………………………………………………………

2.8 அம்மாவின் அக்காவின் கணவர் உமக்கு என்ன உறவுமுறை?

……………………………………………………………………………………

2.9 மாமாவின் மனைவி உமக்கு என்ன உறவுமுறை

……………………………………………………………………………………

2.10 விமானம் செலுத்துபவர் யார்?

……………………………………………………………………………………

(10 x 2 = 20 புள்ளிகள்)

3. அவுஸ்திரேலியாவில் அதிகம் வாழும் கங்காரு என்ன மிருகத்தைப் பற்றி உமது தாய் நாட்டில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுங்கள். கடிதம் 50 சொற்களுக்குக் குறைவுபடாது இருத்தல் வேண்டும்.

(15 புள்ளிகள்)

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

4 தொடங்கப்பட்ட பின்வரும் கதையின் இறுதிப்பகுதியை உமது கற்பனையில் 50 சொற்களுக்குக் குறையாது எழுதி நிறைவு செய்யுங்கள்.

(15 புள்ளிகள்)

அன்று மழைநாள் - நாள் முழுவதும் இடிமுழக்கத்துடன் கடும்பழை பெய்து கொண்டிருந்தது. கடுமையான காற்றும் வீசியதால் வெளியே கடும் குளிர். நானும் அம்மா, அப்பா, தங்கை யாவரும் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம். இரவு 7 மணியிருக்கும் எமது வீட்டின் வெளிக்கதவில் ஒரு முனகல் சத்தத்துடன் உரவும் சத்தமும் கேட்டது. அப்பா எழுந்து சென்று கதவைத் திறக்க நானும் தங்கையும் பின்னே சென்றோம். என்ன ஆச்சரியம்! ஒரு அழகிய வெள்ளை நாய்க்குட்டி மழையில் நனைந்து நடுங்கியபடி நின்றது. பார்க்கப் பரிதாபமாக இருந்தது

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

5 மிகச்சரியான சொல்லைத் தெரிவு செய்து வட்டமிடுங்கள்

5.1 கதவின் (திறப்பு, துறப்பு) காணாமற் போய்விட்டது.

5.2 நேற்று இரவு நான் கண் (முழித்துப், விழித்துப்) படித்தேன்.

5.3 எனது வீட்டு (என், எண்) எட்டு.

5.4 அப்பா சுவரில் (ஆனி, ஆணி) அறைந்தார்.

5.5 நாம் (இறைவனை, இரைவைனை) போற்றி வணங்க வேண்டும்.

5.6 விளையாடும் போது (அளுக்குகள், அழுக்குகள்) வியர்வையாக வெளியேறும்.

5.7 வெற்றி பெற்ற (குழுவினர், குளுவினர்) பரிசு பெறுவர்.

5.8 (வெத்திலை, வெற்றிலை) கொடுத்து விருத்தினரை வரவேற்போம்.

5.9 ஆசிரியர் இன்று நீல நிறத்தில் (சீலை, சேலை) அணிந்துள்ளார்.

5.10 பாம்பைக் கண்ட (சிறுவன், சிருவன்) தலை தெறிக்க ஓடினான்.

(10 புள்ளிகள்)

6 பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

(20 புள்ளிகள்)

6.1 தந்தையர் தினம்
6.2 நீர் தயாரித்துச் சுவைத்த ஒரு கலாசார உணவு
6.3 வெள்ளப்பெருக்கு
6.4 அவுஸ்திரேலியாவின் பருவகாலங்கள்
6.5 தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற வாணிவிழா

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………